सत्यमेव जयते

புதுச்சேரி அரசு

# வரவு - செலவுத் திட்ட உரை

## 2022 - 2023

## திரு ந. ரங்கசாமி

மாண்புமிகு முதலமைச்சர்




22 ஆகஸ்ட், 2022

# வரவு - செலவுத் திட்ட உரை

2022 - 2023

வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை. (குறள்-512)

பொருள் வரும் வழிகளைப் பெருக்கச் செய்து, அவற்றால் வளத்தை உண்டாக்கி, வரும் இடையூறுகளை ஆராய்ந்து நீக்க வல்லவனே செயல் செய்ய வேண்டும்.

***மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்களே !***

**நா**ன் பெருமை வாய்ந்த இந்த அவையில் 2022-23ஆம் நிதி ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க உள்ளேன். பதினைந்தாவது சட்டமன்றத்தில் எனது இரண்டாவது வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். மேலும், இந்த வாய்ப்பை எனக்கு வழங்கிய புதுச்சேரி ஆட்சிப்பரப்பு மக்களுக்கு நான் கடமைப்பட்டுள்ளேன். பெருமை வாய்ந்த இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு 2022-23ஆம் நிதி ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை, மானியக் கோரிக்கைகள் மற்றும் விளக்கக் குறிப்பு அறிக்கை ஆகியவற்றின் பிரதிகள் வழங்கப்பட உள்ளன.

**2.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பானது நல்லாட்சி, அமைதி, நல்லிணக்கம் மற்றும் பொருளாதார முன்னேற்றம் ஆகிய இலக்குகளை நோக்கி உறுதியுடன் முன்னேறி வருகிறது. மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு நரேந்திர மோடிஜி அவர்களின் நோக்கத்தின்படி, வணிகம், கல்வி, ஆன்மீகம், சுற்றுலா ஆகிய துறைகளில் BEST புதுச்சேரியாக மாற்றத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது. கடுமையான நிதி நெருக்கடி இருந்தபோதிலும், எனது அரசு பல நலத்திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது என்பதை நான் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**3.** கடந்த 2021-22ஆம் நிதியாண்டில் நமது செலவினம் ₹ 9,793.29 கோடியாகும். இது 2021-22இன் திருத்திய மதிப்பீட்டின்படி 94.04 விழுக்காடு ஆகும். இந்த நிதியாண்டில், 01-04-2022 முதல் 31-08-2022 வரையிலான ஐந்து மாதங்களுக்கு உண்டான அரசின் அன்றாட அத்தியாவசிய செலவினங்களுக்காக முன்னளி மானியத்திற்கு இப்பேரவையின் ஒப்புதல் பெறப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். 2022-23ஆம் நிதியாண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ₹ 10,696.61 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவற்றில் ₹ 8,675.65 கோடி வருவாய்ச் செலவினங்களுக்காகவும் மற்றும் ₹ 2,020.96 கோடி மூலதன செலவினங்களுக்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில், இவ்வாட்சிப்பரப்பின் சொந்த

வருவாய் ₹ 6,557.23 கோடியாகும், மத்திய அரசின் நிதி உதவி ₹ 1,729.77 கோடியாகும். மத்திய சாலை நிதி (Central Road Fund) ₹ 20.00 கோடி மற்றும் மத்திய அரசுத் திட்டங்களின்கீழ் (Centrally Sponsored Schemes) வழங்கும் நிதி ₹ 500.00 கோடியாக இருக்கும். மேலும், நிதிப் பற்றாக்குறையை ஈடுகட்ட ₹ 1,889.61 கோடியை கடன் (Borrowing) மூலம் திரட்ட மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. புதுச்சேரி ஆட்சிப்பரப்பின் 31-03-2022 அன்று வரை மொத்த நிலுவைக் கடன் தொகை ₹ 9,859.20 கோடியாகும்.

**4.** அரசின் நிதி ஒதுக்கீட்டில் பெரும் பகுதி சம்பளம், ஓய்வூதியம், கடன் மற்றும் வட்டியை செலுத்துதல் ஆகிய செலவினங்களுக்காகச் செலவிடப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். 2022-23ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடான ₹ 10,696.61 கோடியில் ₹ 2,312.77 கோடி சம்பளங்களுக்காவும் (21.62 விழுக்காடு), ₹ 1,122.32 கோடி ஓய்வூதியங்களுக்காகவும் (10.49 விழுக்காடு), ₹ 2,311.61 கோடி கடன் மற்றும் வட்டி செலுத்துவதற்காகவும் (21.61 விழுக்காடு), ₹ 1,440 கோடி மின்சாரம் வாங்குவதற்காகவும் (13.46 விழுக்காடு) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், அரசின் மற்ற முக்கிய செலவினங்களான முதியோர் ஓய்வூதியம் மற்றும் பிற நலத் திட்டங்களுக்கு ₹ 1,400 கோடியும் (13.09 விழுக்காடு), அரசுக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் தன்னாட்சி உயர் கல்வி

நிறுவனங்கள், பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு மானியக் கொடையாக ₹ 1,333.19 கோடியும் (12.46 விழுக்காடு) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.** இந்த முன்னுரையுடன், நடப்பு நிதியாண்டிற்கான (2022-23) துறைவாரியான மானியக் கோரிக்கைகளை நான் சமர்ப்பிக்கிறேன்.

## வேளாண் மற்றும் விவசாயிகள் நலம்

**6.** மாநில பொருளாதார வளர்ச்சிக்கு விவசாயம் முக்கிய பங்காற்றுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். விளை நிலங்களில் பல்வேறு வேளாண் உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட வேண்டியதாக உள்ளது. விவசாய நடவடிக்கைகளை அதிகப்படுத்தவும், நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் உள்ள பொதுமக்கள் தங்கள் வீட்டின் மாடியில் காய்கறி சாகுபடி செய்வதை ஊக்குவிக்கும் பொருட்டு, "என் வீடு என் நிலம்" என்ற திட்டத்தின்கீழ் ₹ 5,000 மதிப்பிலான தோட்டக்கலை இடுபொருட்கள், விதைகள், நாற்றுகள், தோட்டக்கலை கருவிகள், நிழல் வலை ஆகியவை உள்ளடங்கிய தொகுப்பு 15 முதல் 30 உறுப்பினர்கள் கொண்ட குழுவிற்கு பாசிக் நிறுவனம் மூலமாக இலவசமாக வழங்கப்படும். இந்த ஆண்டில் சுமார் 5,000 தொகுப்புகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**7.** தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யும் பரப்பளவை அதிகரிக்கவும் மற்றும் விவசாயிகள் காய்கறி சாகுபடி செய்வதை ஊக்குவிக்கவும் "பன்முக வேளாண்மை வாயிலாக, ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாட்டுத் திட்டத்தின்" கீழ், காய்கறி விதைகளை 50 விழுக்காடு மானியத்தில் பயனாளிகளுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**8.** நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 137.54 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## வனம் மற்றும் வனவிலங்கு

**9.** புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் மத்திய வன நாற்றாங்கால் மேம்படுத்தப்படும். வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம் 1972ன் அட்டவணை-I இனமான "ஆலிவ் ரிட்லி" ஆமைகளை பாதுகாக்க புதுச்சேரி கடற்கரை ஓரத்தில் ஐந்து கடல் ஆமைக் குஞ்சு பொறிப்பகங்கள் அமைக்கப்படும். கோயம்புத்தூரில் உள்ள காடுகள் மரபியல் மற்றும் மர வளர்ப்பு நிறுவனத்துடன் இணைந்து புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் இரண்டு "வன அறிவியல் மையங்கள்" அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. பல்லுயிர்ச் சட்டம் 2002-ஐ செயல்படுத்தும் பொருட்டு தேசிய பல்லுயிர் ஆணையத்தின்கீழ் உள்ளாட்சி அமைப்புகளில் "பல்லுயிர் மேலாண்மை குழுக்கள்" அமைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. மேலாண்மை மற்றும் மரம்

சார்ந்த தொழில் வழிகாட்டுதல்கள் 2021ன்படி, புதுச்சேரிப் பிராந்தியத்தில், மரம் மற்றும் மரம் சார்ந்த உற்பத்திகளின் வழங்கல் மற்றும் தேவை குறித்து அறிவியல் ஆய்வு நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை நலம்**

**10.** மூன்றில் இரண்டு பங்கிற்கும் மேலான ஊரக மக்களின் வாழ்வாதாரத்திற்கு கால்நடைகள் முக்கிய காரணமாக திகழ்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். எனது அரசு, பால் உற்பத்தியை பெருக்கி, அதன்மூலம் விவசாயிகளின் வருமானத்தை மேலும் அதிகரிக்க, சிறந்த மரபணு கொண்ட கலப்பின கிடேரிக் கன்றுகளை மட்டுமே உருவாக்கும் பொருட்டு, இனம் பிரிக்கப்பட்ட உறைவிந்துகளை வாங்கும் செயல் திட்டத்தை தொடங்கியுள்ளது. மத்திய அரசின் நிதி உதவியுடன், தொலைபேசி சேவையுடன் கூடிய நடமாடும் கால்நடை சிகிச்சை மையம் (Mobile Veterinary Clinic with Call Centre facility), தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 90 விழுக்காடு மானியத்துடன் ஆடு வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

**11.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பில், ஆர்வமுள்ள பொதுப்பிரிவு விவசாய பயனாளிகளுக்கு 25 விழுக்காடு மானியமும் மற்றும் அட்டவணைப் பிரிவு விவசாய பயனாளிகளுக்கு 33 விழுக்காடு

மானியத்திலும் 4,000 கறவைப் பசுக்கள் வழங்கப்படும். புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் கால்நடை பராமரிப்பை வலுப்படுத்த 500 பால் உற்பத்தியாளர்களுக்கு கால்நடைத் துறையின் மூலம் பயிற்சி அளிக்கப்படும்.

**12.** வெள்ளாடு / செம்மறி ஆடு மற்றும் கோழிப் பண்ணைகள் அமைக்க, ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு ராஜீவ் காந்தி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் வல்லுனர்களைக் கொண்டு, இரண்டு முதல் ஏழு நாட்கள் வரை தொழில்நுட்பத்திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படும். தொழில்முனைதலை உருவாக்குதல் மற்றும் வேலைவாய்ப்பினை ஏற்படுத்துதல் (EDEG) என்ற திட்டத்தின்கீழ் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடனுதவி பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும். இளங்கலை பட்டப்படிப்பு (விலங்கியல் அறிவியல்) மாணவர்கள் பயனடையும் வகையில், புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் ஒப்புதலுடன் 20 இடங்களுடன் கூடிய புதிய முதுகலை பட்டப்படிப்பு (உயிரி அறிவியல்) ராஜீவ் காந்தி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் (RIVER) தொடங்கப்படும்.

**13.** கிரிராஜா கோழிகள் தொடர்ந்து வளர்க்கப்பட்டு விவசாயிகளுக்கு இந்த வருடமும் விற்பனை செய்யப்படும். ராஜீவ் காந்தி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (RIVER) நாட்டுக் கோழி இனங்களான கடக்நாத் மற்றும்

அசீல் ஆகியவற்றைப் பாதுகாக்க சிறப்புப் பிரிவை அமைத்துள்ளது. இந்த பிரிவில் கோழிக் குஞ்சுகள் ஒரு நாள் வளர்க்கப்பட்டு அதனை கோழி வளர்ப்பவர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இந்த எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**14.** நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 57.57 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கலை மற்றும் பண்பாடு**

**15.** கலை மற்றும் பண்பாடு அனைத்து சமூகங்களையும் ஒன்றிணைக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். மாணவ-மாணவியர்களிடையே கலாச்சார நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையில் அரியாங்குப்பம், பாரதியார் பல்கலைக் கூட வளாகத்தில் ₹ 14.18 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் தாகூர் கலை மற்றும் பண்பாட்டு வளாகம் நடப்பாண்டில் கட்டி முடிக்கப்படும்.

**16.** இளைஞர்கள் பயனடையும் வகையில் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பிராந்தியங்களில் ஆதிதிராவிட மக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் உள்ள அரசு கிளை நூலகங்களுக்கு ₹ 10 இலட்சம் செலவில் தொழில் மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டு நூல்கள் வாங்கப்படும். வாடகை கட்டடங்களில் இயங்கி வரும் அரசு கிளை நூலகங்கள் அரசு கட்டடங்களுக்கு

மாற்றப்படும். சேலியமேடு, செல்லிப்பட்டு மற்றும் சேதாரப்பட்டு பகுதிகளில் உள்ள பழுதடைந்த அரசு கிளை நூலகங்களை புனரமைக்கும் பணி மேற்கொள்ளப்படும். அனைத்து நூலகங்களிலும் அடிப்படை வசதிகள் உறுதி செய்யப்படும். காலியாக உள்ள நூலகப் பணியிடங்கள் வெகு விரைவில் நிரப்பப்படும். கலைஞர்கள் மற்றும் அறிஞர்களுக்கு கலைமாமணி, தமிழ்மாமணி உள்ளிட்ட அனைத்து விருதுகளும் வழங்கப்படும்.

**குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள்**

**17.** தொகுதிவாரியான குறை தீர்வு கூட்டங்கள் நல்ல பலன்களை அளித்துள்ளது. குறிப்பாக, கிராமப்புற மக்களுக்கு இதன்மூலம் தீர்வு உடனுக்குடன் கிடைக்கப்பெறுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். எனவே, மாண்புமிகு உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, இதுபோன்ற குறை தீர்வு கூட்டங்கள் பெருமளவில் நடத்தப்படும்.

**18.** நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 237.38 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கூட்டுறவு**

**19.** கூட்டுறவு இயக்கமானது நாட்டில் உள்ள அனைத்து பிரிவினருக்கும் குறிப்பாக, உணவு உற்பத்தியில் நாட்டை தன்னிறைவு பெறச்செய்யும் விவசாய சமூகத்தினருக்கு மகத்தான

பங்காற்றுகிறது. புதுச்சேரி மற்றும் காரைக்கால் பிராந்தியத்தில் உள்ள நலிந்த கூட்டுறவு சங்கங்களை மேம்படுத்தும் பொருட்டு ₹ 30 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

**20.** நமது அன்றாட பால் தேவையில் சுமார் 50 விழுக்காடு, வெளிமாநில கூட்டுறவு மற்றும் தனியார் பால் பண்ணைகளில் இருந்து கொள்முதல் செய்யப்படுகிறது. நமது தேவையை நாமே பூர்த்தி செய்துகொள்ளும் வகையில், புதுச்சேரி, அரியூர் பகுதியில் பாண்லே நிறுவனத்திற்குச் சொந்தமான இடத்தில் ₹ 1.90 கோடி திட்ட மதிப்பீட்டில் பால் பண்ணை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**21.** புதுச்சேரி பால் உற்பத்தியாளர்கள் கடன் பெறுவதை எளிமையாக்கும் பொருட்டு, பாண்லே நிறுவனமானது பாரத ஸ்டேட் வங்கியுடன் இணைந்து சுலபமாக மற்றும் விரைவாக கடன் பெறும் திட்டத்தினை தொடங்கியுள்ளது. கிரிஷி சபல் பால் கடன் திட்டத்தின் மூலம் (Krishi SAFAL Dairy Loan) தகுதியுள்ள பால் உற்பத்தியாளர்கள் வங்கி கிளைகளுக்குச் செல்லாமல் கடன்பெற விண்ணப்பிக்க முடியும். மேலும், பால் உற்பத்தியாளர்கள் குறைந்தபட்சம் ₹ 20,000 முதல் அதிகபட்சம் ₹ 3,00,000 வரை நான்கு ஆண்டுகளுக்குள் திருப்பிச் செலுத்தும் வகையில் கடன் பெற பாரத ஸ்டேட் வங்கியின் யோனோ குறுஞ்செயலி மூலம் (SBI Yono App) விண்ணப்பிக்க இயலும்.

**22.** காரைக்கால் பிராந்தியத்தில் பால் மற்றும் பால் உபபொருட்கள் ஐந்து கொம்யூன்களிலும் உள்ள 17 பாலகத்தில் 24 மணி நேரமும் விற்பனை செய்யப்பட்டு வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். பால் மற்றும் பால் பொருட்களின் விற்பனையை அதிகரிக்கும் பொருட்டு ₹ 12.50 இலட்சம் மதிப்பீட்டில் ஐந்து பாலகங்கள் தொடங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது, பால் பதனிடும் பிரிவில் பயன்பாட்டில் உள்ள ஒரு மணி நேரத்திற்கு 3,000 லிட்டர் பால் கிரீம் பிரித்தெடுக்கும் இயந்திரத்தை ₹ 20.00 இலட்சம் செலவில் 5,000 லிட்டர் நிகழ்நிலை பால் கிரீம் பிரித்தெடுக்கும் (Online cream separator) இயந்திரமாக தரம் உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**23.** புதுச்சேரி மையக் கூட்டுறவு விற்பனை விநியோகச் சங்கத்தில் அனைத்து விதமான அரிசி ரகங்கள், சிறு தானியங்கள் மற்றும் இதர உணவு பொருட்கள் பொதுமக்களின் தேவைக்கு தகுந்தாற்போல் பாக்கெட்டுகளில் நிரப்பி விற்பனை செய்ய, ஒருங்கிணைந்த விற்பனை நிலையம் ஒன்றை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுடன் பகிர்ந்துகொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். மேலும், நவீன அரிசி ஆலை வளாகத்தில் நவீன முறையில் நெல் சேமிப்பதற்கு தொம்பைகள் (Silos) நிறுவப்படும். மேற்படி சங்க அரிசி வளாகத்தில் புதிதாக மரச்செக்கு எண்ணெய் பிரிவு தொடங்கி,

உற்பத்தி செய்யப்படும் சுத்தமான மரச்செக்கு எண்ணெய்யை பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படும். காரைக்கால் பிராந்தியத்தில் சிமெண்ட் மற்றும் ஸ்டீல் ஆகிய கட்டிட பொருட்களை விற்பதற்காக கூடுதல் கிளைகள் அமைக்கப்படும். உர விற்பனையை அதிகரிக்கும் பொருட்டு காரைக்கால் முழுவதும் கூடுதல் விற்பனை நிலையங்கள் துவங்கப்படும். புதுச்சேரி மத்திய கூட்டுறவு நில வள வங்கியின் நிதியுதவி மூலம் திசுவளர்ப்பு, தோட்டக்கலை, விவசாயப் பொருள் பதனிடுதல், மூலிகைச் செடி வளர்த்தல், உயிரி தொழில்நுட்பம், மீன் வளர்ப்பு ஆகிய விவசாய திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும். லிங்காரெட்டிப்பாளையம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை தனியார் பங்களிப்புடன் மீண்டும் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், இக்கூட்டுறவு சர்க்கரை ஆலையின் PONCOS மேல்நிலைப்பள்ளியை அரசு பள்ளியாக மாற்றப்படும்.

**24.** நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 53.01 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பள்ளிக்கல்வி**

**25.** மாணவர்களின் அறிவாற்றலை பெருக்குவதற்கும் தரமான கல்வியை வழங்குவதற்கும் பள்ளிக்கல்வி முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். தற்பொழுது, நடைமுறையில் உள்ள இலவச பாடப்புத்தகங்கள்,

குறிப்பேடுகள், சீருடை, சிற்றுண்டி, மதிய உணவு, சலுகை கட்டணத்தில் பேருந்து வசதி மற்றும் கல்வி ஊக்கத் தொகை முதலிய நலத்திட்டங்கள் மாணவர்களின் நலன்கருதி தொடர்ந்து செயல்படுத்தப்படும். பள்ளிக்கல்வித் துறையின்கீழ் இயங்கும் "விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்", தனித் துறையாக உருவாக்கப்படும். இதற்காக, இந்த நிதியாண்டில் ₹ 3 கோடி ஒதுக்கப்படும்.

**26.** புதுச்சேரி பள்ளிக்கல்வியின் தரத்தை உயர்த்தும் பொருட்டு அனைத்து அரசுப் பள்ளிகளின் வகுப்பறைகளும் பொலிவுரு வகுப்பறைகளாக (Smart Classes) மாற்றப்படும். கல்வித் தரத்தினை மேலும் உயர்த்தும் பொருட்டு "பள்ளிக்கல்வி தரக் கண்காணிப்பு மையம்" ஏற்படுத்தப்பட்டு ஒவ்வொரு மாணவரின் கற்றல் மற்றும் ஆசிரியரின் கற்பித்தல் திறன் தொடர்ந்து சீராய்வு செய்யப்படும்.

**27.** நடப்பு நிதியாண்டில் பள்ளிக்கல்விக்காக ₹ 802.92 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**உயர் மற்றும் தொழில்நுட்பக்கல்வி**

**28.** உயர் மற்றும் தொழில்நுட்பக் கல்வியானது, திறன்மிக்க மனிதவளத்தை உருவாக்கி அதன்மூலம் தொழில் உற்பத்தியை பெருக்கி, வாழ்க்கை தரத்தை உயர்த்துவதில் முக்கிய பங்கு

வகிக்கிறது என்பதை அனைவரும் அறிவர். சென்டாக் மூலம் தேர்வு செய்யப்பட்ட மாணவர்களுக்கு தற்பொழுது செயற்பாட்டில் இருக்கும் நிதியுதவி வழங்கும் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்படும். இதன் மூலம் இவ்வாண்டு 12,214 மாணவர்கள் பயன்பெறுவர். இதற்கு போதுமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கலிதீர்த்தால்குப்பத்தில் இயங்கும் பெருந்தலைவர் காமராஜர் கலைக் கல்லூரியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படும். மேலும், வில்லியனூரில் உள்ள கஸ்தூரிபாய் மகளிர் கல்லூரியில் புதிய கட்டிடம் (Academic Block) கட்டப்படும்.

**29.** ஏனாம் பிராந்தியத்தில் உள்ள மக்களின் நீண்ட நாள் கோரிக்கையைப் பூர்த்தி செய்யும் வகையில், இவ்வாண்டு டாக்டர் A.P.J. அப்துல் கலாம் அரசு பொறியியல் கல்லூரியில் புதிய வகுப்புகள் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**30.** புதுச்சேரியில் அனைத்து கல்லூரிகளையும் ஒருங்கிணைத்து, தொகுப்பு கல்லூரிகளாக மாற்றி அதன்மூலம் பல்துறை கல்வி நிறுவனங்கள் நிறுவி, தேவைப்படும் நேரத்தில் மாணவர்கள் படிப்பை நிறுத்தும்பட்சத்தில் பொருத்தமான சான்றிதழ் வழங்கப்படும்.

**31.** புதுடெல்லியில் உள்ள அகில இந்திய தொழில்நுட்ப கழகத்தின் (AICTE) ஒப்புதல் பெற்று புதுச்சேரி, இலாசுப்பேட்டை அரசு மகளிர் தொழில்நுட்பக் கல்லூரி (Women Polytechnic),

மகளிர் பொறியியல் கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இதன்மூலம், கட்டடக்கலை (Architecture Assistantship), கணினி பொறியியல் (Computer Science and Engineering), மின் மற்றும் மின்னணுவியல் (Electrical and Electronics Engineering) மற்றும் மின்னணு மற்றும் தகவல் தொடர்பு (Electronics and Communication Engineering) ஆகிய நான்கு பாடப்பிரிவுகளில் தலா 60 இடங்கள் வீதம் மொத்தம் 240 மாணவிகள் பயன் பெறுவர். மேலும், புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தின் ஒப்புதலுடன் 60 மாணவிகள் இளங்கலை வணிகவியல் (B.Com.) பட்டப்படிப்பு பயில புதிய வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளது.

**32.** "தேசிய சட்ட பல்கலைக்கழகம்" ஒன்று புதுச்சேரியில் நிறுவப்படும். இப்பல்கலைக்கழகம் அமைய தேவையான நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான அடிக்கல்நாட்டு விழாவிற்கு மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு நரேந்திர மோடிஜி அவர்கள் அழைக்கப்பட்டுள்ளார் என்பதை இந்த மன்றத்து உறுப்பினர்களுக்கு நான் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**33.** நடப்பு நிதியாண்டில் உயர் மற்றும் தொழில்நுட்பக் கல்விக்காக ₹ 300.78 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மின்விசை**

**34.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் புதியதாக மறுசீரமைக்கப்பட்ட மின் விநியோகத் திட்டத்தினை (RDSS) அறிமுகப்படுத்த உள்ளது. இத்திட்டத்தின்மூலம் இவ்வாட்சிப்பரப்பில் அனைத்து மின் நுகர்வோர்களுக்கும் தடையில்லா மின் விநியோகம் வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் உள்ள அனைத்து மின் நுகர்வோர்களுக்கும் ₹ 282 கோடி செலவில் முன்பணம் செலுத்தக்கூடிய 4.06 இலட்சம் ஸ்மார்ட் மின் அளவிகள் மின்சார நிதி கழக ஆலோசனை குழுமத்தின்மூலம் “மூலதனம் மற்றும் செயலாக்க செலவு முறையில்” (TOTEX) பொறுத்தப்படவுள்ளது.

**35.** மேலும், இவ்வாட்சிப்பரப்பில் மின் விநியோகக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக ₹ 276 கோடி திட்ட மதிப்பீட்டில் (i) மின் இழப்பை குறைத்தல் (₹ 156 கோடி) மற்றும் (ii) மின் விநியோக கட்டமைப்பை மேம்படுத்துதல் (₹ 120 கோடி) ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின்கீழ் பழைய மின் கடத்திகளை மாற்றுவது, புதிய பகிர்ந்தளிக்கும் மின் மாற்றிகளை நிறுவுவது, மேல்நிலை மின் இணைப்புகளை புதை மின்வடமாக மாற்றியமைப்பது, வான்வழி தொகுப்பு கம்பிகள் (Aerial bunched cables) அமைப்பது, உயர் மின் அழுத்த மின்விநியோக அமைப்பை உருவாக்குவது, துணை மின்நிலையங்களில் மின் தேக்கிகளை நிறுவுவது, புதுச்சேரி

மற்றும் காரைக்கால் பிராந்தியங்களில் புதிய 33 / 11 KV துணை மின்நிலையங்கள் அமைப்பது, மின்மாற்றிகளின் திறனை அதிகரிப்பது மற்றும் துணை மின் நிலையங்களை புனரமைத்து நவீனமயமாக்குவது முதலியன இத்திட்டத்தின்கீழ் அடங்கும்.

**36.** புதுச்சேரி பிராந்தியத்தில் உள்ள ஏழு 110 / 22 KV துணை மின்நிலையங்கள் மற்றும் புதுச்சேரி ஆட்சிப்பரப்பின் இதர பிராந்தியங்களில் உள்ள அனைத்து 110 KV துணை மின்நிலையங்களிலும் ஒளியியல் சார்ந்த மின் வழித்தட அமைப்பின்மூலம் தொலைத்தொடர்பு மற்றும் தகவல்கள் பெறுவதற்கான திட்டம் ₹ 7.38 கோடி செலவில் 50:50 நிதி விகிதாசாரத்தில் மத்திய, மாநில பங்கீட்டில் நிறைவேற்றப்படவுள்ளது.

**37.** பொலிவுரு நகரத் திட்டத்தின்கீழ் ₹ 28.70 கோடி செலவில் இலாசுப்பேட்டை பகுதியில், இரண்டு 25 MVA திறன் உள்ள மின்மாற்றிகள் கொண்ட ஒரு புதிய 110 / 22 KV வாயு காப்பு துணை மின்நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ₹ 29.92 கோடி செலவில், வில்லியனூர், காலாப்பட்டு, கோர்க்காடு, திருபுவனை மற்றும் தேத்தாம்பாக்கம் துணை மின் நிலையங்களில் உள்ள மின் மாற்றிகளின் திறனை 25 MVA திறனாக மாற்றியமைக்கப்படும். மேலும், ₹ 21.64 கோடி திட்ட மதிப்பீட்டில் வெங்கட்டா நகர் 110 / 22-11 KV துணை மின்நிலையத்திலிருந்து ஜிப்மர் வளாகத்தில் புதியதாக அமைக்க

உத்தேசிக்கப்பட்டுள்ள வாயு காப்பு துணை மின்நிலையம் வரை 110 KV புதை மின்வடங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. புதுச்சேரி இலாசுப்பேட்டை மற்றும் தவளக்குப்பத்தில் இரண்டு 25 MVA மின் மாற்றிகள் கொண்ட புதிய 110/22 KV வாயு காப்பு துணை மின்நிலையம் அமைப்பதற்குத் தேவையான நிலம் கையகப்படுத்தப்படும்.

**38.** 2022-23 நிதியாண்டில் ₹ 25 கோடி மதிப்பீட்டில் (i) வெவ்வேறு திறனுடைய 50 புதிய பகிர்ந்தளிக்கும் மின்மாற்றிகள் அமைக்கப்படும், (ii) 15 கிலோமீட்டர் அளவிற்கு புதிய உயர் மின்அழுத்தப் பாதைகள், 50 கிலோமீட்டர் அளவிற்கு புதிய குறைந்த மின்அழுத்தப் பாதைகள் அமைக்கப்படும்; மற்றும் 5 கிலோமீட்டர் அளவுவிற்கு உயர்மின் அழுத்தப் பாதைகள், 15 கிலோமீட்டர் அளவிற்கு குறைந்த மின்அழுத்தப் பாதைகள் மேம்படுத்தப்படும், (iii) 10 தொழிற்சாலைகளுக்கு உயர் மின்அழுத்த இணைப்புகளும், 50 தொழிற்சாலைகளுக்கு குறைந்த மின்அழுத்த இணைப்புகளும் வழங்கப்படும். 40 விவசாய பம்ப் செட்டுகளுக்கும், 12,000 வீடுகள், 1,700 வர்த்தக நிறுவனங்கள் மற்றும் 250 புதிய தெரு விளக்குகளுக்கும் மின் இணைப்புகள் வழங்கப்பட உள்ளன, (iv) 5 கிலோமீட்டர் தூரம் அளவிற்கு உயர் மற்றும் குறைந்த மின் அழுத்த புதை மின்வடங்கள் புதிதாக அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், 50 குறைந்த மின் அழுத்த

மேல் நிலை இணைப்புகள் புதை மின்வடங்களாக மாற்றப்படும், (v) 10,000 பழுதான இயந்திர மின் அளவிகளை எலக்ட்ரானிக் மின் அளவிகளாக மாற்றுதல் ஆகிய மின் உள்கட்டமைப்பு மூலதன பணிகள் நிறைவேற்றப்படவுள்ளன.

**39.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் மின் ஆய்வுகளை சட்டப்பூர்வமாக மற்றும் திறம்பட மேற்கொள்ள மின் ஆய்வு மற்றும் மின்சார உரிமம் வழங்கும் வாரியம் (Licensing Board) தொடங்கப்பட்டு நடப்பாண்டு முதல் செயல்பாட்டுக்கு கொண்டுவரப்படும். மத்திய அமைச்சகத்தின், கனரக தொழிற்சாலைகள் மற்றும் பொது நிறுவனங்களுக்கான வழிகாட்டுதலின்படி புதுச்சேரி பிராந்தியத்தில் மின்சார வாகனங்களில், மின்னேற்றம் செய்வதற்கான உள்கட்டமைப்பு அமைப்பது தொடர்பாக புதுச்சேரி மின்துறையை நோடல் முகமையாக நியமித்துள்ளது. இத்திட்டத்தில் 10 மின்னேற்ற நிலையங்கள் புதுச்சேரி மற்றும் உழவர்கரை நகராட்சி பகுதிகளில் அமைக்கப்படும்.

**40.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் பொதுப்பணி, உள்ளாட்சி, சுற்றுலா முதலிய துறைகள் மற்றும் புதுச்சேரி ஆதி திராவிடர் மேம்பாட்டுக் கழகம் (PADCO) மூலம் அமைக்கப்பட்டுள்ள அனைத்து தெரு மின் விளக்குகள் மற்றும் High Mast விளக்குகள் அமைத்தல் மற்றும் பராமரித்தல் பணிகளை இனி மின் துறையே மேற்கொள்ளும்.

**41.** நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 1,697.33 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தீயணைப்பு**

**42.** புதுச்சேரி பிராந்தியத்தில் தவளக்குப்பம், கரையாம்புத்தூர், லிங்காரெட்டிப்பாளையம் மற்றும் காரைக்கால் பிராந்தியம் திருமலைராயன்பட்டினத்தில் புதிய தீயணைப்பு நிலையங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கோரிமேடு பகுதியில் உள்ள ஷண்முகாபுரம் தீயணைப்பு குடியிருப்பு வளாகத்தில் புதியதாக கோட்ட தீயணைப்பு அதிகாரி அலுவலகம் கட்டப்படும். மேலும், இத்துறைக்கான சிறு பணி மனை அமைக்கப்படும். இத்துறையை நவீனமயமாக்குவதற்காக 54 மீட்டர் உயரம் செல்லக்கூடிய அதிநவீன ஸ்கை லிஃப்ட், கம்பியில்லா தொலைபேசி கருவிகள், தீயணைப்பு ஊர்திகளின் பராமரிப்புக்காக மின்கலன் மின்னேற்றி, ஹைட்ராலிக் உயர்த்திகள், டிஜிட்டல் வரைபடத்துடன் கூடிய நவீன கட்டுப்பாட்டு அறை மற்றும் அதற்குரிய பணியாளர்களுக்கான பணியிடங்களை உருவாக்குதல், பழுதடைந்த வாகனங்களுக்கு பதிலாக அனைத்து தீயணைப்பு நிலையங்களுக்கும் புதியதாக 18 நீர்தாங்கி ஊர்தி வாங்குதல் போன்றவை மேற்கொள்ளப்படும். மேலும், நிரந்தர தீயணைப்பு பயிற்சி மையம் மற்றும் அதற்குத் தேவையான 10 தொழில்நுட்ப பணியாளர்களுக்கான பணியிடங்கள் உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**43.** தீயணைப்புத் துறையை மேலும் வலுப்படுத்தும் பொருட்டு, காலியாக உள்ள 52 தீயணைப்பாளர்கள், 12 வாகன ஓட்டுநர்கள் மற்றும் 4 தீயணைப்பு நிலைய அதிகாரிகள் ஆகிய பதவிகளை நிரப்புதல் மற்றும் அதிநவீன ஸ்கை லிஃப்டை இயக்குவதற்குத் தேவையான 38 பணியாளர்கள் மற்றும் 3 உதவி கோட்ட தீயணைப்பு அதிகாரி பதவிகள் உருவாக்கப்படும்.

**44.** நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 31.05 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மீன்வளம் மற்றும் மீனவர் நலம்**

**45.** மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கு மீன்பிடித் தொழில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. எனது அரசு, மீனவ சமுதாய மக்களின் நலனை கருத்தில் கொண்டு தொடர்ந்து பல நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவர்.

**46.** மீன்வளத் துறையில் செயற்படுத்தப்படும் திட்டங்கள் உரிய நேரத்தில் செயற்படுத்துவதற்கும் மற்றும் திட்டங்களை பற்றிய விவரங்களை பயனாளிகள் எளிதில் அறிந்துகொள்வதற்கும் தேவையான மீன்வள தரவுகளின் தொகுப்பு (Data base) உருவாக்குவதற்கு உண்டான பூர்வாங்க பணிகள் தேசிய தகவலியல் மையத்தின் (NIC) தொழில்நுட்ப உதவியுடன்,

EFFORTS செயலி உருவாக்கப்பட்டு மீன்வளத் துறையில் சோதனை கண்ணோட்டத்தில் உள்ளது. இந்த செயலி விரைவில் மீனவர்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

**47.** மீனவர்களின் பாதுகாப்பிற்காக, புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் பதிவுசெய்யப்பட்ட விசைப்படகுகளில் தொலைதொடர்பு சாதனமான டிரான்ஸ்பாண்டர் பொருத்தப்படும். சீர்காழியில் உள்ள மத்திய அரசின் கடல் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் (MPEDA) ஒரு பிரிவான ராஜீவ் காந்தி மீன்வளர்ப்பு மையத்தின் (RGCA) தொழில்நுட்ப உதவியுடன் காரைக்கால், திருநள்ளாரிலுள்ள மீன்வளத் துறையின் “தூண்டுதல் முறையில் இனப்பெருக்க மையம்” முழு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும். மீன்வளர்ப்போர் மேம்பாட்டு மையத்தில் பதிவுசெய்துள்ள சுமார் 100 பயனாளிகளுக்கு மொத்தம் ₹ 6 இலட்சம் செலவில், 50 விழுக்காடு மானியத்தில் ₹ 12,000 மதிப்புள்ள விசிறு வலை (Drag net) வழங்கப்படும். காரைக்கால் பிராந்தியத்தைச் சேர்ந்த 50 மீனவ பயனாளிகளுக்கு புதிய பைபர் கட்டுமரங்கள் வாங்குவதற்கு 50 விழுக்காடு மானியத்தொகை தலா ₹ 75,000 வீதம் மொத்தம் ₹ 37.50 இலட்சம் வழங்கப்படும். பதிவுபெற்ற உள்நாட்டு மீனவர்களுக்கு உதவும்பொருட்டு, இயந்திரம் பொருத்தாத பைபர் கட்டுமர உரிமையாளர்களுக்கு தலா ₹ 5,000 மதிப்பிலான மீன்பிடி வலைகள், மொத்தம் ₹ 42.50 இலட்சம் செலவில் வழங்கப்படும். மாஹே பகுதி

மீனவர்களின் தேவைகளுக்கிணங்க டீசல் / மண்ணெண்ணெய் விற்பனை மையம், புதுச்சேரி மீனவர் கூட்டுறவு சம்மேளனத்தின்மூலம் நிறுவப்படும். மாஹே பகுதியில் மீன்பிடி துறைமுக கட்டுமான பணிகளை விரைவாக முடித்து அத்துறைமுகத்தில் மீன்பிடி பணிகள் தொடங்குவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

**48.** பனித்திட்டு, பூரணாங்குப்பம்-புதுக்குப்பம் மீனவ கிராமங்களிலுள்ள "மீன் ஏலக்கூடம்" ₹ 80.00 இலட்சம் செலவில் மறுசீரமைக்கப்படும். புதுச்சேரியில், தற்பொழுதுள்ள 13 பணிக் கூடங்கள் ₹ 40.00 இலட்சம் செலவில் பழுதுநீக்கம் செய்யப்படும். புதுச்சேரி, பனித்திட்டு மீனவ கிராமத்தில் ஒரு சிறிய மீன்பிடி இறங்குதளம் அமைப்பதற்குண்டான தொழில்நுட்ப-பொருளாதார சாத்தியக்கூறுகள் ஆராயப்படும். தற்பொழுது மீன் வளர்ப்போர் மேம்பாட்டு நிறுவனத்தில் (FFDA), பதிவுசெய்துள்ள மீன்வளர்ப்பு குட்டைகள் புதுப்பிக்கப்படுவதற்கு நிதியுதவியாக, ஏக்கர் ஒன்றிற்கு ₹ 5,000 வீதம், மொத்தம் 100 மீன் வளர்ப்பு குட்டைகளுக்கு ₹ 5.00 இலட்சம் நிதியுதவி அளிக்கப்படும். உள்நாட்டு நீர் நிலைகளில் மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்காக தற்பொழுது ஏக்கர் ஒன்றிற்கு ₹ 7,500ஆக வழங்கப்படும் இடுபொருள் மானியம் ₹ 8,500ஆக உயர்த்தி 120 ஏக்கருக்கு ₹ 10.20 இலட்சம் வழங்கப்படும். புதுச்சேரி பெரிய அங்காடியில் தற்பொழுது இயங்கிவரும் பனிக்கட்டி உற்பத்தி நிலையம்

(Ice plant) ₹ 40.00 இலட்சம் செலவில் சீரமைக்கப்படும். மத்திய அரசின் நிதி உதவியுடன் காரைக்கால் மாவட்டத்திலுள்ள திருமலைராயன் ஆற்றின் முகத்துவாரத்தை ஆழப்படுத்துவதற்கும் மற்றும் திருமலைராயன்பட்டினத்தில் ஒரு சிறிய மீன்பிடி துறைமுகத்தை அமைப்பதற்கும் தேவையான தொழில்நுட்ப-பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கை தயார் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். புதுச்சேரி பகுதியில் எந்தெந்த மீனவ கிராம மக்களுக்கு தூண்டில் வளைவு தேவைப்படுகிறதோ, அதனை பூர்த்தி செய்யும்வண்ணம் தொழில்நுட்ப-பொருளாதார சாத்திய கூறுகள் ஆராயப்படும்.

**49.** பிரதம மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா திட்டத்தின் கீழ், மீனவர்கள் மற்றும் மீன் வளர்ப்போரின் பொருளாதாரத்தை மேம்படுத்த, புதுச்சேரி, காரைக்கால், மாஹே மற்றும் ஏனாம் பிராந்தியங்களில் மீன் வளர்ப்போர் உற்பத்தியாளர்கள் நிறுவனம் தொடங்கப்படும். உள்நாட்டு நீர்நிலைகளில் மீன் உற்பத்தியை அதிகரிக்க ஆற்றுப்படுகைகளில் கெண்டை மீன் குஞ்சுகள் விடப்படும்.

**50.** சாகர் மாலா திட்டத்தின்கீழ், புதுச்சேரி தேங்காய்திட்டு (₹ 9.81 கோடி), பட்டினச்சேரி (₹ 5.83 கோடி), அரசலாறு ஆறு (₹ 9.14 கோடி) மற்றும் ஏனாம் (₹ 9.34 கோடி) பகுதிகளில் "மிதக்கும் படகு துறை" கட்டப்படும். புதுச்சேரி மற்றும் காரைக்கால் மீனவர்களுக்கு மாற்று வாழ்வாதாரம் அளிப்பதற்காக,

கடற்பாசி வளர்ப்பதற்கு உகந்த இடமும் மற்றும் பொருத்தமான கடற்பாசி இனமும் கண்டறிவதற்காக ₹ 97.00 இலட்சம் மதிப்பிலான சாத்தியக்கூறு அறிக்கை மத்திய அரசின் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டுள்ளது. மத்திய அரசின் அனுமதி கிடைத்தவுடன் சாத்தியக்கூறுகள் அறிக்கை ஆராய்ந்து செயல்படுத்தப்படும். பயோ-ஃப்ளாக் (Bio-floc) குட்டைகள் அமைப்பதற்கு ஒரு குட்டைக்கு ₹ 14.00 இலட்சம் வீதம் இரண்டு குட்டைகள் அமைப்பதற்கு மானியம் வழங்கப்படும். நல்ல சுகாதாரம் மற்றும் சர்வதேச தரம்வாய்ந்த மீன்கள் கிடைப்பதற்கு ₹ 1 கோடி மதிப்பீட்டில் புதுச்சேரி தேங்காய்திட்டு, கழிமுக மீன்பண்ணை மற்றும் காரைக்கால் பகுதிகளில் மீன் ஆய்வகம் அமைக்கப்படும்.

**51.** மத்திய அரசு திட்டத்தின்கீழ், கடலில் மீன்பிடி தொழில்புரியும் மீனவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் பொருட்டு ₹ 7.82 கோடி செலவில் புதுச்சேரி கடலோர காவல் துறைக்கு ₹ 1.86 கோடி மதிப்புடைய 5 டன் எடை கொண்ட நான்கு மீட்பு மற்றும் ரோந்து படகுகள் கொள்முதல் செய்யப்படும். புதுச்சேரி மீனவ கிராமங்களிலுள்ள மீன்வளத்துறை முகாம் அலுவலகத்தை செம்மைப்படுத்த, சாகர் மித்ரா அலுவலர் நியமிக்கப்படுவார்.

**52.** நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 124.93 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சுகாதாரம் மற்றும் குடும்ப நலம்**

**53.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் உள்ள அனைத்து குடிமக்களுக்கும் சுகாதார சேவை எளிதில் கிடைக்கப்பெறுவது அவசியம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். அடிப்படை சுகாதார வசதிகளை அனைத்து மக்களுக்கும் அளிக்கும் நோக்கில் எனது அரசு பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

**54.** ராஜீவ் காந்தி அரசு மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை சிறப்பான மருத்துவ சேவையை மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு அளித்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இம்மருத்துவமனையின் மேல்தளத்தில் அமைக்கப்பட்டுள்ள சூரிய மின் உற்பத்தி மையம் விரைவில் பயன்பாட்டிற்குவரும். புதியதாக பிறந்த குழந்தைகளின் நலம் மற்றும் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ள நோயாளிகளின் பயன்பாட்டிற்காக அல்ட்ரா சவுண்டு மற்றும் எக்கோ உபகரணங்கள் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**55.** பொலிவுரு நகரத் திட்டத்தின்கீழ் (Smart City Project) மருத்துவ சேவையை மேலும் மேம்படுத்த புதுச்சேரி, இந்திரா காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் பட்ட மேற்படிப்பு நிறுவனம் மற்றும் ராஜீவ் காந்தி அரசு மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் இ-மருத்துவ சேவை தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**56.** தேசிய சுகாதாரத் திட்டத்தின்கீழ் (National Health Mission) தற்பொழுது உள்ள சுகாதார மையங்களுடன், கூடுதலாக நான்கு புதிய நகர சுகாதார மையங்கள் தொடங்கப்படும். புதுச்சேரி, இந்திரா காந்தி அரசு பொது மருத்துவமனையில் தீயணைப்பு உபகரணங்கள் நிறுவுவதற்கும் மற்றும் மருத்துவக்கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**57.** காரைக்கால், அரசு பொது மருத்துவமனையில் புறநோயாளிகள் பதிவு மற்றும் சிகிச்சைப் பிரிவு ₹ 55 கோடி மதிப்பீட்டில் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், காரைக்காலில், புதியதாக அரசு பொது மருத்துவமனை ஒன்றை ₹ 80 கோடி செலவில் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. தேசிய மருத்துவ கவுன்சில் விதிமுறைகளின்படி, காரைக்காலில் ஒரு புதிய மருத்துவக் கல்லூரி கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**58.** ஏனாம் பகுதியில், சுகாதார வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு பரம்பேட்டா பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார மையத்தில் நவீன சலவையகம் அமைக்கப்படும். தற்பொழுதுள்ள வெளிப்புற சிகிச்சைப் பிரிவு மேம்படுத்தப்படும். மேலும், பழைய அலுவலக அறையை புதுப்பித்து அங்கு காசநோய் (RNTCP), எய்ட்ஸ், யானைக்கால் (Filaria), மலேரியா போன்ற நோய்களை கண்டறிவதற்கான நவீன உபகரணங்களுடன் கூடிய ஆய்வகம்

அமைக்கப்படும். மேலும், இரண்டு அவசரகால ஊர்திகள் (Ambulance), Colour Doppler USG மற்றும் 500MA Digital X-ray உள்ளிட்ட உயிர் காக்கும் உபகரணங்கள் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**59.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் இயங்கும் அனைத்து அரசு மருத்துவமனைகள் மற்றும் சுகாதார நிலையங்களுக்குத் தேவையான அனைத்துவிதமான மருந்துகள், எம்.ஆர்.ஐ., எக்ஸ்ரே, CT Scan போன்ற உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் ஆய்வகப் பொருட்கள் முதலியன புதுச்சேரி அரசின் மருந்தகம் மூலம் ஒருங்கிணைந்த முறையில் கொள்முதல் செய்யப்படும். இதற்காக, இந்த நிதியாண்டில் ₹ 75 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**60.** புதுச்சேரி, கதிர்காமம், இந்திரா காந்தி அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் ₹ 77 கோடி மதிப்பீட்டில் ரேடியோ தெரபி துறை அமைப்பதற்கும் மற்றும் “அவசர விபத்து சிகிச்சை மையம்” அமைப்பதற்கும் புதிய கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி, மகாத்மா காந்தி முது நிலை பல் மருத்துவக் கல்லூரியில் ஒரு புதிய பல்நோக்கு அரங்கம்; மற்றும் பல் மருத்துவக் கவுன்சில் விதிமுறைகளின்படி, புதிய உபகரணங்கள் / இயந்திரங்கள் முதலியன ₹ 23 கோடி செலவில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**61.** மாஹே, சாலக்கராவில், ராஜீவ் காந்தி ஆயுர்வேத மருத்துவக் கல்லூரிக்கு ஒரு புதிய கட்டடம் மற்றும் விடுதி கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**62.** நடப்பு நிதியாண்டில் சுகாதாரத் துறைக்காக ₹ 1,036.51 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தகவல் தொழில்நுட்பம்**

**63.** தகவல் தொழில்நுட்பம் அரசுத் துறைகளின் அனைத்து நடவடிக்கைகளையும் நெறிமுறைப்படுத்த இன்றியமையாத ஒன்றாக திகழ்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இதனை முழுமையாக பயன்படுத்தும் வண்ணம் என்னுடைய அரசு பல திட்டங்களை தகவல் தொழில்நுட்ப வல்லுனர்களின் பங்களிப்புடன், இந்த நிதியாண்டில் செயல்படுத்த உத்தேசித்துள்ளது.

**64.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பில், தகவல் தொழில்நுட்பத்தினை முழுமையாக பயன்படுத்தி, மின் ஆளுமை மூலம் காகிதமில்லா நிர்வாக முறையை அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு, சட்டப்பேரவையின் அனைத்து நடவடிக்கைகளையும் காகிதமில்லா பரிவர்த்தனையாக மாற்ற இ–விதான் (e-Vidhan), அனைத்து துறைகளிலும் கோப்புகள் தயாரித்தல்/சமர்ப்பித்தல் மற்றும் இதர பணிகளுக்காக மின்னணு – அலுவலக

(e-Office) வலைதள செயலி, அரசு ஊழியர்களின் மனிதவள மேலாண்மைக்காக மின்னணு-மனிதவள மேம்பாட்டு செயலி (e-HRMS), மற்றும் அனைத்து அரசு ஊழியர்களுக்கும் தேசிய தகவலியல் மையத்தின் மின்னஞ்சல் முகவரி படிப்படியாக உருவாக்குதல் ஆகியவை மேற்கொள்ளப்படும். இ-விதான் நடைமுறைப்படுத்துவதற்காக எனது அரசு, புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை செய்துள்ளது. இதற்காக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், மின்னணு-அலுவலகத்திற்கான (e-Office) திட்ட மதிப்பீடு தயாரிக்கும் பணியும் நடைபெற்று வருகிறது. அரசின் ஆவணங்களை, மின்னணு முறையில் சேமிக்க, டிஜி லாக்கர் (Digilocker) முறை நடைமுறைப்படுத்தப்படும். மேலும், அனைத்து அரசுத் துறைகளின் சேவைகளை ஒருங்கிணைந்த முறையில் உமாங் கைப்பேசி செயலி மூலம் எளிதில் பெற நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**65.** மேலும், இத்திட்டங்களை செயல்படுத்துதற்காக ₹ 1 கோடி மதிப்பீட்டில் புதுச்சேரி மின்னாளுமை சங்கத்தில் ஒருங்கிணைந்த தொழில்நுட்பக் குழு ஒன்று உருவாக்கப்படும். இந்தக் குழுவானது, அனைத்து அரசுத் துறைகளுக்கும் தேவையான, தரவு அறிவியல் (Data Science), பிளாக்செயின் தொழில்நுட்பம் (Blockchain Technology), செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence/ Machine Learning) போன்ற வளர்ந்து வரும் தொழில்நுட்ப

சேவைகளை அளிக்கும். மேலும், தகுதிவாய்ந்த பயிற்றுனர்கள்/ வழிகாட்டிகளைக் கொண்டு, பொறியியல் கல்லூரி படிப்பினை முடித்த மாணவர்களுக்கு உதவித்தொகையுடன் கூடிய தகவல் தொழில்நுட்ப செயலி பயிற்சி அளிக்கப்படும்.

**இந்து சமய நிறுவனங்கள்**

**66.** இந்து அறநிலையத்துறை மற்றும் வக்ஃபு வாரியம் நவீனமயமாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேலும், இத்துறையின் கட்டுப்பாட்டில் வரும் அனைத்து கோவில்களின் தங்கம் மற்றும் வெள்ளி ஆபரணங்கள், கடவுள் உருவச் சிலைகள் மற்றும் அசையும் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களையும் டிஜிட்டல் முறையில் பராமரிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேலும், அனைத்து கோவில்களின் அசையா சொத்துக்கள் அனைத்தையும் நில அளவை செய்து பாதுகாக்கப்படும். குத்தகைக்கு விடப்பட்ட அனைத்து சொத்துக்களுக்கும் நியாயமான வாடகைத் தொகையை வசூலிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். இந்து சமய நிறுவனங்களின் கட்டுப்பாட்டின்கீழ் வரும் 15 திருக்கோவில்களுக்கும் மற்றும் கட்டுப்பாட்டின்கீழ் வராத 17 திருக்கோவில்களுக்கும் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

**தொழில்கள் மற்றும் வணிகம்**

**67.** புதுச்சேரியின் தொழில் வளர்ச்சியில், தொழில் மற்றும் வணிகத்துறையானது முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும், பொருளாதார வளர்ச்சிக்கும் மற்றும் இளைஞர்களின் வேலைவாய்ப்பினை மேம்படுத்துவதற்கும் தொழில்துறை முதுகெலும்பாக விளங்குகிறது. எளிதாக வணிகம் செய்வது தொடர்பாக அனைத்து வணிகர்களுக்கும் முழுமையான ஆன்லைன் ஒற்றைச் சாளர அமைப்பினை அமைத்து அதனை கட்டாயமாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், நடைமுறையில் உள்ள தொழில் தொடங்க உரிமம் வழங்கும் முறைகளை எளிமைப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. உள்ளூர் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு தேவையான வழிகாட்டுதல் மற்றும் அதன்மூலம் சலுகைகள் பெறுவதற்கு வழிவகை செய்யப்படும்.

**68.** புதுச்சேரியில் தூய்மையான சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்கத்துடன் மாசுபடுத்தாத வாகனங்களை தயாரிக்க தொழில்துறை நிறுவனங்களுக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு மின்சார வாகன கொள்கை தயாரித்து அதனை நடைமுறைப்படுத்தப்படும். புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் உற்பத்தியாகும் கைவினைப் பொருட்கள் மற்றும் தொழிற்கூடங்களில் உற்பத்தியாகும் பொருட்களை விற்பதற்கு

கண்காட்சி நடத்த ஆவன செய்யப்படும். மேலும், புதிய தொழில் தொடங்குவோர்களுக்கு பல துறைகளிடம் இருந்து பெறவேண்டிய அனுமதிகளை வழிகாட்டி குழுமத்தின் மூலம் பெற்றுத்தர ஆவன செய்யப்படும்.

**69.** நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 107.80 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தொழிலாளர் நலம்**

**70.** நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தொழிலாளர்களின் பங்கு மிக முக்கியமானதாகும். இதனைக் கருத்தில்கொண்டு, எனது அரசு, தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டு அவை நடைமுறைப்படுத்தப்படும். தொழிலாளர் சட்டங்கள் / விதிகளின்கீழ் செய்யவேண்டிய பதிவுகள், புதுப்பித்தல், உரிமம் மற்றும் திட்ட ஒப்புதல்கள் ஆகிய பணிகளை, ஆன்லைனில் பெறும் வசதி சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கல்லூரி மாணவர்கள் பயன்பெறும் வகையில் Aptitude Development and Reasoning Skills ஆன்லைன் மூலம் பயிற்சிகள் வழங்கப்படும். மேலும், ஆன்லைனில் நிகழ்ச்சிகள் நடத்தி அதனை சேமித்து You Tube Channel-ல் பதிவேற்றம் செய்வதற்காக வேலைவாய்ப்பு அலுவலகத்தின் வளாகத்தில் திரைப்பட கூடம் (Studio) ஒன்று அமைக்கப்படும். பெண்களின் நலன் கருதி, 75 மகளிர் பயன்பெறும் வகையில் அலங்கார ஆடை (Aary Work), ஆபரணம் தயாரித்தல்

(Jewel making), சபினா மற்றும் பினாயில் தயாரித்தல் போன்ற பணிகளில் திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படும். ஐம்பொன் கலைஞர்களுக்காக நலவாரியம் அமைக்கப்படும். இதற்காக, இந்த நிதியாண்டில் ₹ 10.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**71.** பிரதம மந்திரியின் திறன் மேம்பாட்டு (PMKVY) திட்டத்தின்கீழ் புதுச்சேரி, மதகடிப்பட்டு பகுதியில் இயங்கிவரும் தொழிலாளர் நல மையத்தை, தொழிலாளர் பயிற்சி மையமாக மாற்றப்படும். மேலும், அரியாங்குப்பம் பகுதியில் வாடகை கட்டடத்தில் இயங்கிவரும் இரண்டு அரசு மருந்தகத்தை, புதியதாக கட்டப்பட்ட மத்திய அரசின் கட்டடத்திற்கு மாற்றப்படும்.

**72.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் வகையில், கொரோனா காலத்திற்குபின், 6 வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, அவற்றின் மூலம் 1,722 இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். மேலும், வேலைவாய்ப்பை அதிகரிக்க, தொழிற்சாலைகள் மற்றும் தனியார் நிறுவன பங்களிப்புடன் வேலைவாய்ப்பு முகாம்கள் தொடர்ந்து நடத்தப்படும்.

**73.** தற்போது புதுச்சேரியில் மட்டுமே மாதிரி தொழில் வழிகாட்டு மையம் அமைந்துள்ளது. காரைக்கால், மாஹே மற்றும் ஏனாம் பகுதிகளில் மாதிரி தொழில் வழிகாட்டு மையங்கள் அமைப்பதற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. காரைக்காலில் ₹ 34.74 இலட்சம் செலவிலும் மாஹேயில்

₹ 37.60 இலட்சம் செலவிலும் ஏனத்தில் ₹ 44.84 இலட்சம் செலவிலும் இந்த ஆண்டு மாதிரி தொழில் வழிக்காட்டு மையங்கள் அமைக்கப்பட உள்ளன.

**74.** தொழிற்பயிற்சி நிலையங்களின் திறனை மேம்படுத்தும் வகையில் புதுச்சேரி பெண்கள் தொழிற்பயிற்சி நிலையத்தில் சுமார் ₹ 50 இலட்சம் செலவில் 60 கணினிகளுடன் கூடிய குளிரூட்டப்பட்ட பயிற்சி மையம் சென்ற மாதம் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதுபோன்ற கணினி மையங்கள் சுமார் ₹ 30 இலட்சம் செலவில் காரைக்கால், திருமலைராயன்பட்டினம் ஆண்கள் தொழிற்பயிற்சி நிலையத்திலும், சுமார் ₹ 20 இலட்சம் செலவில் நெட்டப்பாக்கம் தொழிற்பயிற்சி நிலையத்திலும், சுமார் ₹ 10 இலட்சம் செலவில் மாஹே தொழிற்பயிற்சி நிலையத்திலும் அமைக்கப்பட்டு வருகின்றன. திறன் மேம்பாட்டு திட்டத்தின் மூலம் மேட்டுப்பாளையம் தொழிற்பயிற்சி நிலையத்தில் சுமார் ₹ 1.50 கோடி செலவில் இரு பயிற்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டு விரைவில் திறக்கப்பட உள்ளன.

**75.** மத்திய அரசின் சங்கல்பத் திட்டத்தின் மூலம் புதுச்சேரி மாநிலத்தில் உள்ள இளைஞர்களின் திறனை மேம்படுத்தி தேவையான வேலைவாய்ப்பில் சேர்வதற்காக மூன்று ஆண்டு காலத்திற்கு நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இந்நிறுவனம் மூலம், இளைஞர்களின் திறனை மேம்படுத்த பலவகைப்பட்ட திறன் மேம்பாட்டு பயிற்சிகள் பல பிரிவினருக்கு அளிக்கப்படும்.

**76.** அமைப்புச்சாரா தொழிலாளர்களை ஒருங்கிணைத்து அவர்களுக்கு பயன்படும் பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தும் வகையில் மத்திய அரசால் இ-சாரம் வலைத்தளம் அமைக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் துறையின் தொடர் முயற்சியின் பலனாக புதுச்சேரி ஆட்சிப்பரப்பைச் சார்ந்த 1,75,761 அமைப்புசாரா தொழிலாளர்கள் தங்களை பதிவு செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் பல அமைப்புச்சாரா தொழிலாளர்கள் இந்த இணையதளத்தில் தங்களை பதிவு செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**உள்ளாட்சி**

**77.** புதுச்சேரியின் தூய்மையை பராமரிப்பதில் உள்ளாட்சி அமைப்புகள் முக்கிய பங்காற்றுவதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ல் குறிப்பிட்டுள்ளவாறு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை அமுல்படுத்துவதில் எனது அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. சுமார் ₹ 30 கோடி மதிப்பீட்டில், புதுச்சேரி மற்றும் காரைக்காலில் உள்ள அனைத்து கொம்யூன் பஞ்சாயத்துகளுக்கு உட்பட்ட பகுதிகள் மற்றும் காரைக்கால் நகராட்சிக்கு உட்பட்ட

பகுதிகளில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்படும். இதேபோல் கடந்த காலங்களில் சேகரிக்கப்பட்ட குப்பைகளை மறுபயன்பாடு மற்றும் மறுசுழற்சிக்கு உட்படுத்தப்படும் பணி நிறைவு பெற்ற பின்னர், புதுச்சேரி மற்றும் உழவர்கரை நகராட்சிப் பகுதிகளில் விரிவான ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் ₹ 48 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

**78.** ஏற்கனவே கிராமப்புறங்களிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் 100 விழுக்காடு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்ட மாநிலமாக புதுச்சேரி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த நிதியாண்டில் ஜல் ஜீவன் திட்டத்தின்கீழ் ₹ 26 கோடி மதிப்பீட்டில் நீராதாரத்தைப் பெருக்குவது மற்றும் அதன் தரத்தை உயர்த்துவது போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

**79.** AMRUT திட்டத்தின்கீழ், பல்வேறு அடிப்படை கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நிதியாண்டில், நைனார்மண்டபம், சுதானா நகர், தேங்காய்த்திட்டு பகுதிகளில் ₹ 20 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர், காரைக்காலில் நேரு நகர், தலத்தெரு மற்றும் ஏனாம் பகுதிகளில் ₹ 60 கோடி மதிப்பீட்டிலும் நீராதார மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இந்த நிதியாண்டில் தூய்மை

இந்தியா திட்டத்தின்கீழ் வீடுகளில் கழிப்பறை கட்டுதல், திடக்கழிவு மேலாண்மை மற்றும் நீர் மறு சுழற்சிக்கு ₹ 72 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

**80.** உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரத்தை மேம்படுத்துவதற்காக பயன்படுத்தபடாமல் உள்ள நகராட்சிகளுக்கு சொந்தமான சொத்துக்கள் மற்றும் நிலங்களை தனியார் பங்களிப்போடு வருவாய் ஈட்டக்கூடிய சொத்துகளாக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் எளிதாக சொத்து வரியை செலுத்த, பொது சேவை மையம் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக வரி செலுத்துவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்படும்.

**81.** இந்த நிதியாண்டில் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பல்வேறு அடிப்படை கட்டமைப்பு பணிகளை மேற்கொள்வதற்கு தொகுதி வளர்ச்சி நிதியாக ₹ 2 கோடி வழங்கப்படும்.

**பொலிவுரு நகரம்**

**82.** புதுச்சேரி நகரப் பகுதிகளில், பொலிவுரு நகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக ₹ 1,828 கோடிக்கு திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு மத்திய அரசிடம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில், சுற்றுலா மற்றும் பாரம்பரிய கட்டிட பராமரிப்பு, மின்சார சீரமைப்பு, குறைந்த விலையில் வீடு அல்லாதோருக்கு வீடு வழங்குதல், பாரம்பரியமிக்க கல்விக்கட்டிங்களை புனரமைத்தல், 24 மணி நேர குடிநீர் வசதி, பாதாள சாக்கடையை புனரமைத்தல், இ-சுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை, நகர்ப்புற வடிகால் வசதி மேம்பாடு, ஆப்டிகல் பைபர் புதை வடம், நகர்ப்புற போக்குவரத்து மேம்பாடு, பொருளாதாரம் மற்றும் தொழில் மேம்பாடு, இ-போக்குவரத்து மற்றும் கண்காணிப்பு போன்ற நடைபெற்றுக் கொண்டிருக்கும் திட்டப்பணிகள் அடுத்த நிதி ஆண்டு ஜுன் 2023-க்குள் முடித்துவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**83.** புதுச்சேரி அண்ணா திடலை ₹ 9.66 கோடி செலவில் சிறு விளையாட்டு அரங்கமாக அமைத்தல்; பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்காக குறைந்த விலையில் சின்னையாபுரம் பகுதியில் 220 அடுக்குமாடி குடியிருப்புகள் ₹ 18.03 கோடி மதிப்பீட்டில் கட்டுதல்; கார்க்கில் போர் நினைவுச் சின்னத்திலிருந்து வடக்கு கடல் நீரடிப்பாறை (Reef) வரையிலும், Duplex சிலையிலிருந்து பழைய துறைமுகம் வரையிலும் அலங்கார LED விளக்குகள் ₹ 53 இலட்சத்தில் அமைத்தல் ஆகிய பணிகள் நடைபெற்று கொண்டிருக்கின்றன. மேலும், பாப்பாம்மாள் கோயில் வெள்ள நீர் வாய்க்கால் மறுசீரமைப்பு பணிகள் ₹ 3.54 கோடியிலும் நடைப்பெற்று வருகின்றன. வில்லியனூர்

பகுதியில் உள்ள அம்மன் குளம், உப்பளத்தில் உள்ள புறாக் குளம் மற்றும் முதலியார்பேட்டை மரப்பாலம் பகுதியில் உள்ள குளம் ஆகியவை ₹ 1.29 கோடி செலவில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது.

**84.** வெள்ள நீர் வடிகால் அமைப்பு திட்டத்தின்கீழ் முத்தியால்பேட்டை, உப்பளம், அரியாங்குப்பம், உருளையன் பேட்டை, முதலியார்பேட்டை, நெல்லித்தோப்பு மற்றும் வில்லியனூர் பகுதிகளில் உள்ள 'U' வடிவிலான சிறிய வாய்க்கால்களை சீரமைக்க ₹ 5.36 கோடி மதிப்பில் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், முருங்கப்பாக்கம், கல்யாணசுந்தரமூர்த்தி நகர், சிவகாமி நகர், பூமியான்பேட்டை, மரப்பாலம், ஜெயாநகர் போன்ற பகுதிகளில் வாய்க்கால்களை இணைத்தல், மேம்படுத்துதல், கட்டுமான பணிகள் மற்றும் சிறிய பாலங்கள் அமைக்கும் பணிகள் ₹ 58.16 கோடி திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். இது தவிர, ரெயின்போ நகர் மற்றும் கருவடிக்குப்பம் வாய்க்கால்களை சீரமைப்பதற்காக ₹ 20 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**85.** தாவரவியல் பூங்காவை மேம்படுத்துதல், சுதேசி மில் வளாகத்தில் உள்ள வனப் பகுதியை இயற்கை சுற்றுலாத்தலமாக மேம்படுத்துதல், பெரிய வாய்க்காலை புனரமைத்தல், மறைமலை

அடிகள் சாலையில் உள்ள பேருந்து நிலையத்தை மேம்படுத்துதல், கிழக்குக் கடற்கரை சாலையில் உள்ள அரசுக்கு சொந்தமான இடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைத்தல், நேரு வீதியில் உள்ள குபேர் அங்காடியை மறுகட்டமைப்பு செய்தல் ஆகிய பணிகளுக்காக ₹ 313.30 கோடி ஒதுக்கப்பட்டு, பணிகளை மேற்கொள்ள தேசிய கட்டிட கட்டுமான கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**86.** மத்திய அரசின், புதுமையுடன் ஒருங்கிணைந்த நீடித்த வளர்ச்சிக்கான நகர்ப்புற முதலீட்டு (CITIIS) திட்டத்தின்கீழ், நலிவுற்ற குடிசைப் பகுதிகளில் உள்கட்டமைப்புகளை மேம்படுத்த ₹ 99.71 கோடிக்கு, புதுச்சேரி மற்றும் உழவர்கரை நகராட்சிக்கு உட்பட்ட 26 இடங்களில் மொத்தம் 42 கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. அதன்படி குருசுக்குப்பம், பூமியான்பேட்டை, கண் டாக்டர் தோட்டம் மற்றும் மொட்டைத்தோப்பு ஆகிய இடங்களில் உள்ள 1,152 குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளை புனரமைக்கும் பணிகள் துவங்கப்பட உள்ளன. மேலும், வீடு கட்டும் திட்டத்தின்கீழ், மலிவான விலையில் வீடு கட்டுமான பணிகள் திடீர் நகர் மற்றும் குமரகுருபள்ளம் ஆகிய பகுதிகளில் ₹ 52.55 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

**காவல்**

**87.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் வாழும் அனைவரும் அமைதியான மற்றும் பாதுகாப்பான முறையில் வாழ வழி செய்வதே எனது அரசின் முக்கிய குறிக்கோளாகும். இதனை மேலும் வலுப்படுத்தும் பொருட்டு, இவ்வாண்டு "ஆள் கடத்தல் தடுப்பு பிரிவு" ஒன்று உருவாக்கப்பட உள்ளது. மேலும், ₹ 5.50 கோடி செலவில் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள், ஒரு "ஜாமர் வாகனம்" உட்பட வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**88.** பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக இணையவழிக் குற்றங்களைத் (Cyber crimes) தடுக்க, இணையப் பாதுகாப்புக் கருவிகள் (Cyber tools) கூடுதலாக கொள்முதல் செய்யப்படும். புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் சிறந்த முறையில் தகவல் தொடர்பிற்காக அவசரகால மையங்கள் (ERSS Centres) ₹ 57.70 இலட்சம் செலவில் அமைக்கும் பணி விரைவில் முடிவடையும். மேலும் ₹ 40.66 இலட்சம் செலவில் அனைத்து காவல் நிலையங்களிலும் மகளிர் உதவி மையங்கள் அமைக்கப்படும் மற்றும் தற்பொழுது செயற்பாட்டில் உள்ள உதவி மையங்கள் மேலும் வலுப்படுத்தப்படும். கடலோர பாதுகாப்பினை மேம்படுத்தும் பொருட்டு ₹ 20.51 இலட்சம் செலவில் கூடுதல் உயிர் பாதுகாப்பு உடைகள் மற்றும் மிதவைகள் (Life Jackets and Life Buoys) வாங்கப்படும்.

**89.** காவல் துறையின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும்பொருட்டு, காவல் கண்காணிப்பாளர் (மேற்கு) அலுவலகக் கட்டிடம்; ரெட்டியார்பாளையம் காவல் நிலையம்; கரிக்கலாம்பாக்கம் புறக்காவல் நிலையம்; வில்லியனூர் போக்குவரத்து காவல் நிலையம் மற்றும் காரைக்கால், விழுதியூரில் புறக்காவல் நிலையம் ஆகியவை இந்த நிதியாண்டில் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், சேதமடைந்த காவலர் குடியிருப்புகளுக்கு பதிலாக புதிய குடியிருப்புகள் கட்டப்படும். கோரிமேடு, சண்முகாபுரம் மற்றும் பல இடங்களில் பழுதடைந்த குடியிருப்புகள் தேவைக்கேற்ப புனரமைக்கப்படும். காரைக்கால் பகுதியில் முதுநிலை கண்காணிப்பாளர் மற்றும் காவல் கண்காணிப்பாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டப்படும். மேலும், மாஹே பகுதியில் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் கட்டப்படும். புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் 37 இடங்களில் Traffic Signals அமைக்கப்படும்.

**90.** தற்பொழுது புதியதாக தேர்வு செய்யப்பட்ட 390 காவலர்கள் ஓராண்டு அடிப்படை பயிற்சியில் உள்ளனர். மேலும், 48 உதவி ஆய்வாளர்கள், 307 காவலர்கள், 415 ஊர்க்காவல் படையினர், 200 கடலோர ஊர்க்காவல் படையினர், 35 ஓட்டுநர்கள், 34 சமையல் கலைஞர்கள்/ உதவியாளர்கள் / சலவைப் பணியாளர்கள் மற்றும் 5 பக்ளர்கள் (Bugler) நேரடி தேர்வின் மூலம் விரைவில் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர்.

**91.** நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 342.95 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**துறைமுகம்**

**92.** புதுச்சேரி மாநிலத்தின் காரைக்கால் துறைமுகம் மற்றும் இலங்கையில் அமைந்துள்ள காங்கேசன்துறை துறைமுகம் இடையே பயணிகள் மற்றும் சரக்கு கப்பல் போக்குவரத்து இவ்வாண்டு தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. “சாகர் மாலா” திட்டத்தின்கீழ், சென்னை துறைமுக கழகத்துடன் இணைந்து, புதுச்சேரி துறைமுகத்தில் சரக்குகள் கையாளும் பணிகள் இவ்வாண்டு முதல் செயல்பட தொடங்கும். புதுச்சேரி துறைமுகத்தின் மேம்பாட்டிற்காக இத்துறைமுகத்தில் பயணியர் மற்றும் சரக்கு கப்பல் போக்குவரத்து மேற்கொள்ள ஆர்வமுள்ள நிறுவனங்களிடமிருந்து விருப்பம் கோரப்பட்டுள்ளது. இதை நடைமுறைப்படுத்த பூர்வாங்க பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

**பொதுப் பணிகள்**

**93.** பொருளாதார வளர்ச்சிக்கு, உட்கட்டமைப்பில் முதலீடு செய்வது இன்றியமையாதது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். எனவே புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் உட்கட்டமைப்பை மேம்படுத்தும் பொருட்டு, பொலிவுரு நகரத் திட்டத்தின்கீழ், புதுச்சேரிப் பகுதியில் ₹ 67.20 கோடி மதிப்பீட்டில் 6 கழிவுநீர்

வாய்க்கால்களின் கட்டுமான பணிகள் / மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும். ₹ 2.00 கோடி மதிப்பீட்டில் தரமான மற்றும் சுகாதாரமான குடிநீரை வழங்கும் பொருட்டு மண்டலம்-I SCADA (Supervisory Control and Data Acquisition) நிறுவப்படும். அம்ருத் திட்டத்தின்கீழ் ₹ 14.08 கோடி மதிப்பீட்டில், நாள் ஒன்றிற்கு ஒரு மில்லியன் லிட்டர் குடிநீர் சுத்திகரிக்கும் நிலையம் காட்டாமணிக்குப்பம் மற்றும் நடேசன் நகர் பகுதியில் அமைக்கப்படும். மேலும், ₹ 5.38 கோடி மதிப்பீட்டில் புதுச்சேரி, மண்டலம்-IIIல் விடுபட்ட பகுதிகளான சுந்தரராஜன் நகர், ஜான்சி நகர், இந்து நகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் கழிவுநீர் வாய்க்கால் கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்படும்.

**94.** மேலும், ₹ 7.70 கோடி மதிப்பீட்டில் பாகூர் பகுதியில் உள்ள கடற்கரை கிராமங்களில் ஊரகநகர (RURBAN) திட்டத்தின் கீழ் குடிநீர் விநியோகப் பணிகள் மேற்கொள்ளப்படும். காரைக்கால், நெடுங்காடு கிராமம் மற்றும் திருநள்ளார் கொம்யூன் பகுதிகளில் ₹ 14.17 கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டுத்திட்டம் மேற்கொள்ளப்படும்.

**95.** நபார்டு வங்கி கடனுதவி மூலம் ₹ 20.70 கோடி மதிப்பீட்டில் மண்ணாடிப்பட்டு கொம்யூன், செல்லிப்பட்டு கிராமத்தின் அருகில் உள்ள சங்கராபரணி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டப்படும். மேலும் ₹ 7.71 கோடி மதிப்பீட்டில் பாகூர் ஏரியில்

இருந்து உபரிநீர் செல்லும் அணைக்கு அருகே ஒற்றையடி பாலம் மற்றும் ஏரிக்கரையை சுற்றி சாலை அமைக்கப்படும். மேலும், ₹ 49.66 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் கடனுதவியுடன் காரைக்கால் பகுதியில் எட்டு பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும், ₹ 23.34 கோடி மதிப்பீட்டில் குடிநீர் வழங்கல் பிரிவின்கீழ், புதுச்சேரியில் பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும். காரைக்கால் பகுதியில் ₹ 43.43 கோடி செலவில் 6 பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படும்.

**96.** மத்திய அரசின் சாலை மேம்பாட்டு நிதியின் (Central Road Fund) மூலம் ₹ 13.50 கோடி மதிப்பீட்டில் காரைக்கால் பகுதியில் இரண்டு பகுதிகளில் சாலைப் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்படும். ₹ 11.60 கோடி செலவில் விழுப்புரம்-நாகப்பட்டினம் இணைப்பு சாலையை விரிவுபடுத்துதல் மற்றும் காரைக்கால் தேசிய நெடுஞ்சாலையில் சிறிய பாலங்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். பிரதம மந்திரி கிராம சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (PMGSY) இரண்டு சாலைப் பணிகள் ₹ 7.00 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

**97.** மத்திய அரசின் ஜல் ஜீவன் திட்டத்தின்கீழ் ₹ 17.14 கோடி மதிப்பீட்டில் காரைக்கால் பகுதியில் மூன்று வெவ்வேறு இடங்களில் தூய குடிநீர் விநியோகப் பணிகள்

மேற்கொள்ளப்படும். ₹ 296 கோடி மதிப்பீட்டில், புதுச்சேரி பகுதியில் 24 வெவ்வேறு சாலைப் பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும், ₹ 3.70 கோடி மதிப்பீட்டில் 25 இடங்களில் பழுதடைந்த சாலைகள் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும். பாரதிதாசன் மகளிர் கல்லூரி, திருக்கனூர் உயர் நிலைப் பள்ளி மற்றும் ஜீவானந்தம் அரசு மேல் நிலைப் பள்ளியில் புதிய வகுப்பறைகள் கட்டுதல் மற்றும் பள்ளிகளை மேம்படுத்தும் பணிகள் ₹ 12.50 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

**98.** காரைக்கால் பகுதியில் 8 வெவ்வேறு நீர்ப்பாசன மேம்பாட்டு பணிகள் ₹ 23.41 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். மேலும், ₹ 107.59 கோடி மதிப்பீட்டில் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரப் பிரிவின்கீழ் 10 பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. மாஹே பகுதியில் ₹ 94.32 கோடி மதிப்பீட்டில் 26 பல்வேறு பணிகள் மற்றும் ஏனாம் பகுதியில் ₹ 188.32 கோடி மதிப்பீட்டில் 7 பல்வேறு திட்டப்பணிகள் மேற்கொள்ளப்படும். புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும்.

**99.** நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 554.45 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல்**

**100.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பின் வளர்ச்சித் தேவைகள் மற்றும் கடலோர வளங்கள் பாதுகாப்பிற்கு இடையே சமநிலையை ஏற்படுத்துவதற்காக உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் “கடலோர மற்றும் பெருங்கடல் வள ஆதாரங்களை மேம்படுத்துதல்” (ENCORE) திட்டத்தினை இவ்வாட்சிப்பரப்பில் செயல்படுத்த திட்ட அறிக்கையை மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்திடம் சமர்ப்பித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ், கடலோர பகுதிகளில் உள்ள மக்களின் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல், கடலோர வளங்களை பாதுகாத்தல் மற்றும் மாசுக்கட்டுப்பாடு சம்மந்தமாக பல்வேறு பூர்வாங்கப் பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தை செயல்படுத்த, சுற்றுச்சூழல் அமைச்சகம் திட்ட மதிப்பீடாக ₹ 112 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது. பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவின் இறுதி ஒப்புதலுக்காக காத்திருக்கிறது. மேலும், இங்கிலாந்தின், பிரிட்டிஷ் உயர் ஆணையம் இரட்டை நகர திட்டத்தில், புதுச்சேரி மாசு கட்டுப்பாட்டு குழுமத்தை உறுப்பினராக சேர்த்துள்ளது. மேலும், அறிவியல், தொழில்நுட்ப மற்றும் சுற்றுச்சூழல் துறைக்கான அலுவலகக் கட்டடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் ஒருமுறை

பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களை முழுமையாக அகற்ற பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**நகர மற்றும் கிராம திட்டமிடல்**

**101.** மிகவும் நலிவடைந்த மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு (i) புதுச்சேரி, ரெட்டியார்பாளையம் பகுதியில் உள்ள புதுநகர் பிரதான சாலை மற்றும் காரைக்கால், ஆத்தங்கரைப்பேட் பகுதியில் உள்ள குறுக்கு வீதிகளை செப்பனிடுதல்; (ii) காரைக்கால், பிள்ளைத்தெருவாசலில் உள்ள காஞ்சிபுரம்-கோவில்பத்தில் புதியதாக சாலைகள் அமைத்தல்; மற்றும் (iii) மாஹே, பாராக்கல் கடற்கரை சாலையில் உள்ள வாய்காலை மேம்படுத்துதல் மற்றும் அச்சுதன் ஆனந்தன் நினைவு நூலகம் வாசிப்பு அறை பகுதியை சுற்றி சிமெண்ட் பாதை அமைத்தல் போன்ற பணிகள் ₹ 1.13 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளன.

**102.** பிரதம மந்திரி வீடுகட்டும் திட்டத்தின்கீழ் (PMAY) தற்பொழுது கட்டப்பட்டுவரும் வீடுகளின் கட்டுமான பணிகள் 2022-23 நிதியாண்டிற்குள் நிறைவு செய்யப்படும். இத்திட்டத்தில் இணைந்து இதுவரை வீடுகளை கட்ட தொடங்காத / கட்டி முடிக்க பெறாமல் உள்ள பயனாளிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு பணிகளை விரைவில் நிறைவு செய்ய ஆவன செய்யப்படும்.

**சுற்றுலா**

**103.** இவ்வாட்சிப்பரப்பின் பொருளாதார வளர்ச்சிக்கு நேரடியாகவும் மற்றும் மறைமுகமாகவும் சுற்றுலாத் துறை மிக முக்கிய பங்குவகிக்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்ததே. சுற்றுலாத் துறையின் முக்கிய நோக்கம், இம்மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி விகிதத்தை மேம்படுத்துதல் மட்டுமின்றி, உலகளவில் நமது புதுச்சேரி மாநிலத்தை சுற்றுலாவிற்கு உகந்த இடமாக மாற்றுவதே ஆகும்.

**104.** வம்பாகீரப்பாளையம், காலாப்பட்டு, நல்லவாடு, புதுக்குப்பம், மூர்த்திகுப்பம், வீராம்பட்டினம் மற்றும் காரைக்கால் ஆகிய பகுதிகளில் உள்ள கடற்கரைகளை மேம்படுத்தவும், அழகுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. பாண்டி மெரினா கடற்கரை சாலையில் பாரதியார் சிலையுடன் கூடிய “பாரதியார் தமிழ் பூங்கா”, “பொழுதுபோக்கு பூங்கா” மற்றும் “பொழுது போக்கு மண்டலம்” ஆகியவை உருவாக்கப்படும். கலை மற்றும் கைவினை கிராமத்தில் உள்ள புதிய அருங்காட்சியக கட்டிடத்தில் “டிஜிட்டல் அருங்காட்சியகம் மற்றும் சுற்றுலா அனுபவ மையம்” அமைக்கப்படும். மேலும், சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் முருங்கப்பாக்கத்தில் “பொம்மை அருங்காட்சியகம் மற்றும் இயற்கை வரலாற்று அருங்காட்சியகம்” அமைக்கப்படும்.

**105.** மத்திய அரசு நிதி உதவித் திட்டத்தின்கீழ், வீராம்பட்டினம் கோவில் மற்றும் காரைக்காலில் உள்ள பிரசித்திபெற்ற வழிபாட்டுத்தலங்கள் மேம்படுத்தப்பட்டு, அங்கு ஆன்மீக பயணிகளுக்குத் தேவையான வசதிகள் ஏற்படுத்தப்படும். புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒலி-ஒளி மற்றும் மல்டிமீடியா காட்சிகள் உருவாக்கப்படும். சுற்றுப்புறச் சூழல் சுற்றுலாவை மேம்படுத்தும்பொருட்டு பாகூர் ஏரி, முள்ளோடை உப்புநீர்த்திட்டு, கனகன் ஏரி, ஊசுடு ஏரி, சுண்ணாம்பாற்றில் உள்ள தடுப்பணை மற்றும் ஆலங்குப்பம் ஏரி முதலியவற்றை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்காக புதுச்சேரி மணப்பட்டு கிராமத்தில் சுற்றுலாத் துறைக்கு சொந்தமான 100 ஏக்கர் அளவிலான பகுதியில் மின்சாரம், சாலை போன்ற அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளது. மேலும், அப்பகுதியில் (i) தீம் பூங்காக்கள், (ii) ஓய்வு விடுதிகள், (iii) மாநாட்டுக் கூடங்கள், (iv) திரைப்படம் எடுக்கும் கூடம், (v) சாகச விளையாட்டுகள் போன்றவை தனியார் பங்களிப்புடன் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

**106.** மேலும், தனியார் பங்களிப்பை ஈர்க்கும் பொருட்டு சாகச நீர் விளையாட்டு கொள்கையில் தகுந்த திருத்தங்களை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. உள்ளூர் தொழில் முனைவோர்களுக்காக கடற்கரை குடில்களை உருவாக்குவதற்கு காலாப்பட்டு, புதுக்குப்பம் மற்றும் நல்லவாடு பகுதிகளில் உள்ள

கடற்கரைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கான விரிவான வழிகாட்டுதல் நெறிமுறைகள் இந்த நிதியாண்டிற்குள் அறிவிக்கப்படும். புதுச்சேரியில் சுற்றுலாவை மேம்படுத்தும் பொருட்டு, இவ்வாட்சிப்பரப்பில் நடைபெறவிருக்கும் சுற்றுலா விழாக்களை நாடு முழுவதும் அறிந்துகொள்ளும் வகையில் நிகழ்ச்சிநிரல் நாட்காட்டிகள் வெளியிடப்படும். திரைப்பட விழா, இந்தோ-பிரஞ்சு விழா, யோகா விழா, உணவுத் திருவிழா, பாரம்பரிய விழா, மாநாட்டுக் கருத்தரங்கம், சர்வதேச சுற்றுலா-வணிக கருத்தரங்கம் (B2B), திருமண நிகழ்வு தொடர்பான கண்காட்சி மற்றும் சாகச விளையாட்டு நிகழ்ச்சிகள் இந்த ஆண்டு நடத்தப்படும்.

**107.** அரிக்கன்மேடு மற்றும் இந்திய தொல்லியல் ஆய்வு மையத்தின் கட்டுப்பாட்டில் உள்ள கோவில்களுக்கு புதுச்சேரி சிறப்பு வாய்ந்தது. எனவே, அவ்விடங்களுக்கு சென்றுவர சுற்றுலா பயண ஏற்பாடு செய்யப்படும். புதுச்சேரி வேளாண் அறிவியல் மையம் மற்றும் கால்நடை மருத்துவக் கல்லூரி ஆகியவை வேளாண் சுற்றுலாத் தளமாக மேம்படுத்தப்படும். அவ்விடத்தின் கிராமப்புற வாழ்வாதாரம், விவசாயம், பட்டுவளர்ப்பு ஆகியவை சுற்றுலாப் பயணிகளுக்கு காட்சிப்படுத்தப்படும் வகையில் ஒரு மாதிரி கிராமம் அமைக்கப்படும்.

**108.** புதுச்சேரி சுடுகளிமண் சிற்பம் (Terracotta) மற்றும் காகித கைவினைப் பொருட்கள் “புவிசார் குறியீடு” பெற்றுள்ளன. மேலும், பளபளப்பான மட்பாண்டங்கள், அகர்பத்திகள், வாசனை மெழுகு வர்த்திகள், காகிதத்திலான விளக்கு உறைகள் போன்றவற்றிற்கு புதுச்சேரி சிறப்பு பெற்றது. எனவே, கைவினைப் பொருட்களை இணையவழி மூலம் விற்பனை செய்ய ஊக்குவிக்கப்படும். இது உள்ளூர் கைவினைக் கலைஞர்களுக்கு ஊக்கத்தை அளித்து, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும். அவ்வகையிலே கலைகூடங்களும் ஊக்குவிக்கப்படும். இளைய சமுதாயத்தை கவரும் வகையில் மெய்நிகர் காட்சி சிலைகள், லேசர் காட்சிகள், டிஜிட்டல் அருங்காட்சியகம், ஒலிப்பதிவு செய்யப்பட்ட வழிகாட்டி சுற்றுப் பயணங்கள், QR குறியீடு பொருத்தப்பட்ட பலகைகள், டிஜிட்டல் முறையில் சந்தைப்படுத்துதல், இணையவழி பயணச்சீட்டு போன்ற புதிய தொழில்நுட்பம் சார்ந்த செயல்பாடுகள் ஊக்குவிக்கப்படும்.

**109.** நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 22.74 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**போக்குவரத்து**

**110.** பயணிகளின் நலன் கருதியும் மற்றும் வருவாயை மேம்படுத்துவதற்காகவும் புதுச்சேரி சாலைப் போக்குவரத்து கழகத்தில் தற்பொழுது பழுதடைந்த நிலையில் உள்ள



,

36 உள்ளூர் பேருந்துகள் மற்றும் 14 வெளியூர் செல்லும் பேருந்துகளுக்கு மாற்றாக மொத்தம் 50 புதிய பேருந்துகள் ₹ 25 கோடி மதிப்பீட்டில் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதி மக்களின் பயன்பாட்டிற்காக வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**111.** பொதுமக்கள், போக்குவரத்து சேவையை பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் பொருட்டு, பொலிவுரு நகர திட்டத்தின்கீழ், 25 இ-பேருந்துகள் மற்றும் 50 இ-ஆட்டோக்களும் புதுச்சேரியில் புதிதாக இயக்கப்படும். சாலை விபத்துக்களை கட்டுப்படுத்தவும் மற்றும் மகளிர் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிலும் அனைத்து அரசு மற்றும் தனியார் பேருந்துகளில் GPS கருவிகள் பொருத்தப்பட்டு போக்குவரத்து கட்டுப்பாட்டு மையத்தின் மூலமாக கண்காணிக்கப்படும்.

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்

**112.** சமுதாயத்தில் நலிவடைந்த குறிப்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் நலனைப் பாதுகாத்திட எனது அரசு மிகுந்த அக்கறையுடன் செயல்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இந்த ஆண்டு சிறப்புக் கூறு திட்ட நிதியாக (SCP) ₹ 396 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**113.** மத்திய அரசு, வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ், வன்கொடுமையினால் மரணம் அல்லது உடல் உறுப்பு இழந்த ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்களுக்கு நிவாரணத் தொகையாக ₹ 8.25 இலட்சம் வழங்கி வருகிறது. இதனை, ₹ 10.00 இலட்சமாக உயர்த்தி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**114.** தொடர்நோயினால் துயருறும் 18 வயது பூர்த்தி அடைந்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு மருத்துவச் செலவிற்காக ₹ 3,000 ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்டு வருகிறது. இந்த குறைந்தபட்ச வயது வரம்பை நீக்கி, அனைத்து வயதினருக்கும் நிதியுதவி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**சமூக நலம்**

**115.** எனது அரசு சமூக நலத்துறை மூலம் மாற்றுத்திறனாளிகள், குழந்தைகள், முதியோர் மற்றும் நலிவடைந்த நபர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்கள் மூலம் தற்பொழுது 20,147 மாற்றுத்திறனாளிகள் பயனடைந்து வருகின்றனர். இத்துறையின் மொத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 70 விழுக்காட்டிற்கு மேல் மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக செலவிடப்படுகிறது. இதுபோலவே, தற்பொழுது நடைமுறையில் உள்ள முக்கிய நலத்திட்டங்களான திருமண உதவித்தொகை,

கல்வி கட்டணத்தை திரும்ப அளித்தல், எரிபொருள் மானியம், ஈமச்சடங்கு உதவித்தொகை, அரசு பேருந்தில் இலவச பயணம் போன்ற நலத்திட்டங்கள் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும்.

**116.** மாற்றுத்திறனாளிகளுக்கு போக்குவரத்து செலவிற்காக மாதாந்திர பயணப்படி ₹ 100 லிருந்து ₹ 300 ஆக உயர்த்தியளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 3,500 மாற்றுத்திறனாளிகள் பயனடைவார்கள். இதற்காக இந்த நிதியாண்டில் ஆகும் செலவீனம் ₹ 1.26 கோடியாகும். மாற்றுத்திறனாளிகள், மாற்றுத்திறனாளி அல்லாதவரை திருமணம் செய்துகொண்டால் தற்பொழுது வழங்கப்படும் உதவித்தொகை ₹ 25,000லிருந்து ₹ 1,00,000ஆக உயர்த்தி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 25 மாற்றுத்திறனாளிகள் பயனடைவார்கள். இதற்காக இந்த நிதியாண்டில் ஆகும் செலவீனம் ₹ 25.00 இலட்சமாகும். இதுபோலவே, மாற்றுத்திறனாளிகள் மற்றொரு மாற்றுத்திறனாளியை திருமணம் செய்துகொண்டால் தற்பொழுது வழங்கப்படும் உதவித்தொகை ₹ 50,000லிருந்து ₹ 2,00,000ஆக உயர்த்தி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், 10 மாற்றுத்திறனாளிகள் பயனடைவார்கள். இதற்காக இந்த நிதியாண்டில் ஆகும் செலவினம் ₹ 20.00 இலட்சமாகும்.

**117.** அரசு சாரா தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் தங்கி பயன்பெறும் குழந்தைகள், பெண்கள், மாற்றுத்திறனாளிகள், மனநலம் குன்றியவர்கள், முதியோர்கள் மற்றும் பிற பாதிப்பிற்கு

உள்ளான நபர் ஒருவருக்கு தங்களின் அன்றாடம் தேவைப்படும் அத்தியாவசிய பொருட்களுக்காக தற்பொழுது மாதம் ஒன்றிற்கு ₹ 500 மானியமாக வழங்கப்பட்டு வருகின்றது. இந்தத் தொகை கடந்த பல ஆண்டுகளாக உயர்த்தப்படாமல் உள்ளது. தற்பொழுது உள்ள விலைவாசியை கருத்தில்கொண்டு இத்தொகையை ₹ 1,500ஆக உயர்த்தி வழங்க இவ்வரசு உத்தேசித்துள்ளது.

## மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு

**118.** எனது அரசு, மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டிற்கு தனிக்கவனம் செலுத்துகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். குழந்தைகளின் சமூக-பொருளாதார முன்னேற்றத்தை கவனத்தில் கொண்டு, 18 வயது பூர்த்தியடைந்து, குழந்தைகள் பாதுகாப்பு இல்லத்திலிருந்து வெளியேறும் குழந்தைகளை கண்டறிந்து அவர்களின் வாழ்வாதாரம், கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் ஒதுக்கீடு செய்ய இவ்வரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும். HIV / AIDS நோயால் பாதிக்கப்பட்ட 77 குழந்தைகளுக்கு குழந்தை வளர்ப்பு பாதுகாப்பு திட்டத்தின்கீழ் (Sponsorship / Foster Care Scheme) மாதம் ₹ 2,000 நிதியுதவி வழங்கப்படும்.

**119.** புதுச்சேரி, மாஹே மற்றும் ஏனாம் பகுதிகளில் உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கான விடுதி மற்றும் தற்காலிக

உறைவிட இல்லம் அமைக்கப்படும். காரைக்கால், மாஹே மற்றும் ஏனாம் பகுதிகளில் குழந்தைகள் நலக்குழுமம் மற்றும் இளஞ்சிறார் நீதிக்குழுமம் மீண்டும் செயல்பட ஏற்பாடு செய்யப்படும்.

**பொது**

**120.** மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இலவசமாக மடிக்கணினிகள் வழங்கப்படும். மேலும், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்கு இலவச மிதிவண்டி வழங்கும் திட்டம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும்.

**121.** புதுச்சேரி மாநிலத்தில் 21 வயதுக்குமேல் 55 வயதிற்குள் இருக்கும் அரசின் எவ்விதமான மாதாந்திர உதவித்தொகையும் பெறாத வறுமைக்கோட்டிற்குக்கீழ் இருக்கும் ஒவ்வொரு குடும்பத்தலைவிக்கும் மாதந்தோறும் தலா ₹ 1,000 வீதம் வழங்கப்படும்.

**122.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும், ஆயுஷ்மான் பாரத் - பிரதான் மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா என்ற மருத்துவக் காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில், இவ்வாட்சிப்பரப்பு மக்களுக்கு மருத்துவ சுகாதார

பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு, இத்திட்டமானது தகுதிவாய்ந்த வறுமைக் கோட்டிற்குமேல் உள்ள குடும்பங்களுக்கும் நீட்டிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், வறுமைக்கோட்டிற்குக்கீழ் இருக்கும் குடும்பங்களுக்கு கிடைக்கும் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை உட்பட அனைத்து 1,949 சிகிச்சை தொகுப்புகளும் வறுமைக்கோட்டிற்குமேல் உள்ள குடும்பங்களுக்கும் இந்த ஆண்டு முதல் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**123.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பு பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட நிலுவையிலுள்ள முதியோர் ஓய்வூதிய விண்ணப்பங்கள் அனைத்திற்கும் ஓய்வூதியம் வருகின்ற மாதங்களில் வழங்கப்படும்.

**124.** அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிபவர்கள் பணிநிரந்தரம் செய்யப்படுவார்கள்.

**125.** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரசு, தரமான கல்வி, சுகாதாரம், சாலை வசதி மற்றும் தற்பொழுது உள்ள அனைத்து நலத்திட்டங்களும் தங்கு தடையின்றி செயல்படுத்த போதுமான நிதி இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், மாநிலத்தின் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு, சுற்றுலாவை மேம்படுத்த அதற்குண்டான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**126.** இத்துடன், இவ்வாட்சிப்பரப்பின் 2022-23 நிதியாண்டின் ₹ 10,696.61 கோடிக்கான வரவு-செலவுத் திட்ட அறிக்கையை இம்மேலான பேரவையின் பார்வைக்காகவும் மற்றும் ஒப்புதலுக்காகவும் சமர்ப்பிக்கிறேன்.

**வாழ்க பாரதம் ! வெல்க புதுச்சேரி !**

**நன்றி ! வணக்கம் !!**

சுதந்திரத் திருநாள்
அமுதப்பெருவிழா



ஆயி மண்டபம், புதுச்சேரி

வடிவமைப்பு மற்றும் அச்சிட்டோர் : அரசினர் மத்திய அச்சகம், புதுச்சேரி – 605 009.